1995 நவம்பர் 9]

விளங்குகின்ற இந்த அரசு கல்லூரிகள் இல்லாத தாலூக்காக்களில் அதை ஆரம்பிப்பதற்கு வருகின்றவர்களை, கருணை அடிப்படையில் 5 ஏக்கர் நிலம் இருந்தால்தான் கல்வி நிலையம் ஆரம்பிக்கப்படமுடியும் என்ற நிபந்தனையைத் தளர்த்தியாவது அவர்களுக்கு உதவி செய்கின்ற விதத்தில் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேராசிரியர்: க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரி தொடங்க வேண்டுமானால், ஊரகப் பகுதி என்றால் 10 ஏக்கர் நிலம் நகர்ப்புற பகுதியாக இருந்தால் 5 ஏக்கர் என்று நிர்ணயித்து இருக்கிறோம். பொறியியல் கல்லூரியாக இருந்தால் 150 ஏக்கர் ஊரகப்பகுதியிலே வேண்டும், 100 ஏக்கர் நகர்ப்புற பகுதியிலே வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதுபோலவே, பாலிடெக்னிக் தொடங்குவதாக இருந்தால் 25 ஏக்கர் நிலம் வேண்டும் என்று அரசாணையிருக்கிறது. இதைத் தளர்த்துவதற்கு வழிவகைகள் இல்லை. இருப்பினும் ஊரகப்பகுதிகளிலே கல்லூரிகள் தொடங்கப்பட்ட பின்பு அங்கேயிருக்கிற புறம்போக்கு நிலங்கள் அல்லது எந்தத் தேவைக்கும் ஒதுக்கப்படாத நிலங்களாக இருந்தால் விதிமுறைகளின்படி அரசு பரிசீலிப்பதற்கு இடம் இருந்தது. ஆனால், வருவாய்த் துறை 20-12-1989-லே இடப்பட்ட ஆணையின்படி அந்தச் சலுகையும் இப்போது இல்லை. எனவே, இதை அரசு பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு. ஆ. வெ. புருஷோத்தமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

74-

பெண்ணாகரம் தொகுதியில் தொழில்நுட்ப பயிலகங்கள் துவங்குதல்

***33380** அ—டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் புதிதாக அரசு தொழில் நுட்பப் பயிலகங்கள் துவங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1995 நவம்பர் 9

புதியதாக அரசு தொழில்நுட்பப் பயிலகங்கள் துவக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-50

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள். தர்மபுரி மாவட்டம் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மாவட்டம். இன்று பல்வேறு துறைகளிலேயே மிக வேகமாக வளர்ச்சிப் பாதையிலே சென்று கொண்டிருக்கின்ற மாவட்டம். இதில் என்னுடைய பெண்ணாகர வட்டம் தொழில் துறையிலே மிகவும் பின் தங்கிய வட்டமாக மத்திய மாநில அரசுகள் அறிவித்துள்ளன. இப்பகுதியில் வருஷத்திற்கு சுமார் 2,000 மாணவ மாணவிகள் பள்ளி இறுதிப் படிப்பு முடித்து தொழில் நுட்பப் பயிலகங்களில் சேர சுமார் 150 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஓசூருக்கும், 90 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கிருஷ்ணகிரிக்கும் 100 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சேலத்திற்கும் பல சிரமங்களுக்கிடையே அவர்கள் அந்த பள்ளிகளிலே சேர்வதற்கு இடம் கிடைத்து பயின்று வருகின்றார்கள். எனவே என்னுடைய தொகுதிக்கு இது மிகவும் அத்தியாவசியமான ஒன்று. இப்படிப்பட்ட தொழில்நுட்ப பயிலகங்கள் ஆரம்பிக்கத் தேவையான 25 ஏக்கர் புறம்போக்கு நிலம் உள்ளது. தேவையான நிதியை அரசுக்குச் செலுத்தப் பொதுமக்கள் தயாராக உள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதியாண்டிலே இதைப் பெண்களுக்கு என்று சிறப்பான திட்டத்தின் கீழ் பெண்கள் தொழில் நுட்பப்பயிலகம் ஆரம்பிப்பதற்கு மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை கிருஷ்ணகிரியிலே அரசு பாலிடெக்னிக் இருக்கிறது. பாலக்கோடு மற்றும் பர்கூரில் சுய நிதி தொழில்நுட்பப் பயிலகங்கள் இரண்டு இருக்கின்றன. அகில இந்தியத் தொழில்நுட்பக் கழகம் தர்மபுரியிலும் ஓசூரிலும் இந்த ஆண்டில் இரண்டு தொழில்நுட்பப் பயிலகங்கள் தொடங்குவதற்கு அனுமதி தந்துள்ளது. எல்லையோர மாவட்டங்களான சேலம் மற்றும் வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டங்களில் 13 தொழில் நுட்பப் பயிலகங்கள் இயங்கி வருகின்றன. எனவே தற்போதைக்கு இவை போதுமானவை என்று கருதப்படுகிறது என்று தொழில்நுட்ப கல்வித் துறை இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தற்போது

1995 நவம்பர் 9]

142 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. *1995-96*-ல் பொறியியல் கல்லூரிகளோ அல்லது தொழில் நுட்பப் பயிலகங்களோ தொடங்குவது இல்லை என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டிலே இதைப் பற்றிச் சிந்திப்பதற்கு வாய்ப்பு இல்லை. வரும் ஆண்டில் தேவையின் அடிப்படையில் இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் அறக்கட்டளைகள் மூலமாக அல்லது தொண்டு நிறுவனங்கள் மூலமாக இந்த ஆண்டு விண்ணப்பித்தால் அந்த விண்ணப்பத்தை மறுபரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்குவரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி முகமைகள் உரிய வழியிலே விண்ணப்பிக்கலாம். ஆனால் இதற்கான அனுமதி தருவது அகில இந்திய தொழில் நுட்பக் கழகம். அரசின் அனுமதியோடு அந்த அனுமதியையும் பெற்ற பின்புதான் ஒரு தொழில் நுட்பப் பயிலகம் செயல்பட முடியும். ஆகவே அங்கே விண்ணப்பித்தால்தான் இதற்கான வழி பிறக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. முனிவெங்கடப்பன்..

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி மட்டுமல்லாமல் அங்கேயிருக்கின்றவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று தொழில் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, தொழில் நுட்பப் பயிலகம் பாலிடெக்னிக் ஆரம்பிக்க முடியவில்லையானாலும், தொழில் பயிற்சிக் கழகம் ஐ.டி.ஐ. ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் இந்தக் கேள்வியை தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *75*, *திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.*